152

10 APR 1933
MADRAS

FOR SWEEP STAKE TICKETS



DERBY SWEEP 1932.—Staff writing receipts in the plaza during last week.

Apply to:

Tourist Agency, Gobichettipalayam, S.I.

(Madras Branch)

MADRAS

(OPPOSITE TO HIGH COURT)

Q23:35:21193KV
N33
178409

"THE RADIO"

Precision Alarm Time Piece



Similar to a Big Ben in Shape and Size

Description

A superior machine made entirely of steel and brass, with a balance specially cut to give accurate time. Case heavily nickel plated—Dial $5\frac{1}{2}''$ in diam. Clear white dial, with Arabic figures—Powerful intermittent and steady alarm.

CERTIFICATE

Messrs. Khader & Yousuf Bros., Rattan Bazaar, Madras, are Suppliers of timepieces for the use of Board Schools under this Taluk Board for the last several years. They are honest in their dealings and prompt in attending to the repairs. The quality of their articles is good. I have great pleasure in recommending this Company to all the Local Boards and Municipalities.

(Sd.) T. SHUNMUGAM PILLAY,
President
Taluk Board, Saidapet.

KHADER & YOUSUF BROS.

Clock Engineers to the M. & S. M. Railway

RATTAN BAZAAR

MADRAS

THE

GENERAL ACCIDENT

Fire & Life Assurance Corporation Ltd.

INSURANCE

of all kinds is undertaken at moderate cost.

OFFICE OF THE REGISTRAR 10 APR 1933 MADRAS

Motor Car Fire Motor Cycle,

All Risks (Jewellery & Valuables)

Burglary, Baggage, Accident & Sickness,

Workman's Compensation,

Etc., Etc., Etc.

are all Insured.

CHIEF AGENTS

P. HOLT & CO., LTD.

POST BOX NO. 237

MADRAS

178409

630
294.536

THE

GENERAL ACCIDENT

Fire & Life Assurance Corporation Ltd.

IS ONE OF THE LARGEST
INSURANCE COMPANIES OF THE WORLD
AND IS RENOWNED FOR PROMPT & LIBERAL
SETTLEMENT OF CLAIMS

Chief Agents:

P. HOLT & CO., LTD.

POST BOX NO. 237 MADRAS

THE WORLDS BEST PEN

LIZARD

THE BEST BRITISH SERIES
OF FOUNT PENS
GUARANTEED SOLID GOLD NIBS

SUPREME IN SERVICE

SPECIALLY MADE FOR INDIA

AGENTS:

P. HOLT & CO., LTD.

POST BOX NO. 237 MADRAS

Obtainable from all Dealers

ஸ்வாமி சித்ரமாலா மலர் 1

கும்பகோணம்
மகாமகம்

630
294.536
Q23:38:2119312
N53

பிரசுரகர் :

M. K. ரெங்கஸ்வாமி ஐயங்கார்

மயிலாப்பூர், சென்னை

விலை அணு 4

GOODWIN'S SOAPS

WILD ROSE

Goodwin's Wild Rose Soap will delight you with its exquisite perfume. Made from the finest and purest materials, its constant use will preserve the velvety softness of your skin.

— Made by —

GOODWIN'S, MANCHESTER.

WILD ROSE

AGENTS:

P. HOLT & CO., LTD.
POST BOX NO. 237
MADRAS

Obtainable from all Dealers

PREFACE

Religion has played a great part in the life of the people of our country and hence all forms of art have been mostly dedicated to Divine worship. The greatest treasures of our land are to be found in and around our temples and Viharas and the best of our Poetry and the grandest of our Epics have all a religious setting. The sculptures and paintings most often refer to certain events and incidents of the Hindu Puranas or the Buddhistic legends.

It is a matter of very great regret that some of the best of our old sculptures and paintings now adorn the museums of the West while those that are left in the country, often bear the mark of the destructive hand of the foreign invaders. Not even a few of the hundreds of the sculptures in the ruins of Vijayanagar are found intact and one of the Asoka Pillars was converted into a road-roller by a European Engineer.

While the vandalism of the soldiers raging with martial success may be understood, if not excused, it is difficult to condone the utter neglect and decay to which the art treasures are mercilessly exposed to in our temples today. The Pudumandapam of Madura containing very delicately carved sculptures is converted into a medley of shops and a row of beautiful Equestrian statues at Tirupathi have all been closed by brick walls and made into an ugly room. It is a pity that those in charge of temples have no artistic taste and do not realise their responsiblity in the preservation of the priceless monuments in their charge. It must be admitted that this is all due to an utter lack of appreciation, much less understanding, of art in our country.

The present system of education fails to create any taste for art or architecture and it is my humble aim to publish a series of booklets with the object of making the layman and the student take a greater interest in the art and the history of our land. Realising my limitations fully well, I appeal to those who are better qualified, to co-operate with me and make my work a success.

No apology is needed for my taking advantage of the Mahamagham month for commencing this work and being the first of a series, the opinion and the suggestions of the readers are sincerely solicited.

Chithrakulam
Mylapore
27—2—1933

M. K. RANGASWAMI AIYANGAR.

Kumbeswaraswami Temple M. K. R.

THIS BOOK

IS DEDICATED

TO

All lovers of Art and Religion, Europeans and Indians alike whose selfless work has opened our eyes to the greatness of our past.



மகாமகக் குளம் M. K. R.

ஸ்ரீ:

மகாமக மாகாத்மியம்

ஸ்நாநம்—10-3-'33

தென்னிந்திய உத்ஸவங்களும், மஹாமகமும்.

புண்யபூமியாகிய இப்பரதகண்டமானது ஸதலங்களாலும், தீர்த்தங்களாலும், மூர்த்திகளாலும் விசேஷ மகிமைவாய்ந்துள்ளது. அதிலும் ஸ்ரீராமர், கிருஷ்ணர், பௌத்தர் இவர்களுடைய ஜனனபூமியும், கங்கை, யமுனை முதலிய புண்யநதிகளுடன் கூடியதுமாயிருந்தும், வட இந்தியாவைவிட, ஸ்தலவிசேஷங்களில் தென்னிந்தியாவுக்கு மகிமை அதிகம். நம்முடைய மதாசாரியர்களாகிய சங்கராசாரியர், ராமானுஜாசாரியர், மத்வாசாரியர் மூவரும் பிறந்த புண்ணிய பூமியும் இதுவே. முன்பு சேர சோழ பாண்டியர்களும், இடையில் பல்லவ அரசர்களும், பின்னல் விஜயநகர அரசர்களும் இந்தப் பிரதேசத்தைக் கோயில் குளங்களால்



மகாமகக் குளம்—மற்ருெரு பாகம் M. K. R.

அலங்கரித்தார்கள். இங்குள்ள ஸ்தலங்களையும், அவைகளின் கீர்த்தியையும் ஆழ்வார்களும், சைவசமயாசாரியர்களும் விசேஷமாகப் பாடியிருக்கிருர்கள்.

தென்னிந்தியாவில், இதர ஜில்லாக்களை விடச் சோழராஜ்யமாயிருந்த தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களிலேயே கோயில்கள் அதிகம். இந்தக் கோயில்களுக்குப் பலமானியங்கள் புராதனமாக விடப்பட்டிருப்பதுடன், வருஷம் முழுவதும் உத்ஸவங்களும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இப்படி நடக்கும் உத்ஸவங்களில் மகாமகத்துக்கு ஈடான உத்ஸவம் ஒன்றுயே இல்லை. இது த்ரிமதஸ்தர்களுக்கும் பொதுவானது.

மஹாமகம்.—பிருகஸ்பதி பன்னிரண்டு ராசிகளிலும் ஸஞ்சரிப்பதில் ஸிம்மராசிக்கு வரும்போது மஹாமகம் கொண்டாடப்படுகிறது. ஆகையால் மகாமகம் 12 வருஷங்களுக்கு ஒருமுறை வருகிறது. அப்பொழுது மஹாமக தீர்த்தத்திற்கு விசேஷ குணங்களும் புண்ணியமும் உண்டாகின்றன. ஆகையால் மஹாமகத்தை ஓர் புண்ணிய ஸ்நான உத்ஸவம் என்றே சொல்ல வேண்டும்.



காசி விசுவநாதர் கோவில் M. K. R.

இப்படித் தீர்த்த உத்ஸவங்கள் இந்தியாவில் பல இடங்களில் நடைபெறுகின்றன. வட இந்தியாவில் விசேஷமாகக் கொண்டாடப் படும் கும்பமேளமும், ஆந்திர தேசத்தில் நடைபெறும் புஷ்கரமும், ஆகிய இவைகளில் நதிகளும் நதிஸங்கமங்களும் ஸ்நான கட்டங்களாகின்றன. ஆனல் மஹாமகத்தின் விசேஷமோ ஒரு குளத்தை ஒட்டி இருக்கிறது. இப்படி ஒரு குளத்திற்கு விசேஷ மஹிமை ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

கும்பேசுவரர் வரலாறு

நான்கு யுகங்களில் கடைசியான கலியுகத்தின்முடிவில் பிரம்ம தேவர் உலகத்திலுள்ள ஸகல ஜீவராசிகளும், வேதங்களும், ஸ்ருஷ்டிபீஜமும் அழிந்துவிடும்பொழுது மறுபடியும் அவைகளை எப்படி ஸ்ருஷ்டிப்பது என்று தெரியாமல் மாஹாவிஷ்ணுவைப் பிரார்த்தித்தார். அவர் நிய மனப்படி உத்தமமான ஸ்தலங்களிலிருந்து கொஞ்சம் மண்ணை எடுத்து அமிர்த்தத்தை விட்டுப் பிசைந்து ஒரு கலசம் செய்து அதில் அமிர்தம் கலந்த மண்ணைப்போட்டு ஸ்ருஷ்டிபீஜத்தையும் அதில் புதைத்துச் சுற்றிலும் வேதம், ஆகமம், புராணம், இதிகாஸம் முதலியுவைகளையும்

மகாமகக் குளம் வடகரையிலிருக்கும்
துலாபார மண்டபம் M. K. R.

வைத்து, கலசத்தை அமிர்தத்தால் நிரப்பி மேருமலையின் தென்பாகத்தில் ஸ்தாபித்தார். கொஞ்சகாலத்தில் பிரளயமுண்டாகி, வெள்ளமும் காற்றும் அதிகமாகவே, கலசம் தெற்குமுகமாக மிதந்துகொண்டே சென்று ஓரிடத்தில் அசையாது நின்றது. அப்போது பரமசிவன் வேடரூபந்தரித்து அம்பால் அக்கலசத்தை அடித்து உடைத்தார். கலசத்தின் மூக்கு உடைந்து குடவாயில் என்ற விடத்தில் விழுந்தது. அமிர்தம் வழிந்தோடி இரண்டு குளங்களை உண்டாக்கிற்று. அவை மஹாமக தீர்த்தமும் பொற்றாமரைத் தீர்த்தமுமாம். சிவபிரான் நின்று பாணம் விட்டவிடம் பாணபுரியென்னும் பெரிய க்ஷேத்திரமாயிற்று. அங்கேயுள்ள லிங்கத்திற்குப் பாணபுரீசரெனப்பெயர். பிறகு சிவபெருமான் அக்கலசத்திலுள்ள மண்ணைப்பிடித்து ஒரு லிங்கத்தைச் செய்து அதில் மறைந்தார். தேவர்கள் பார்வதிதேவியை லிங்கத்திற்கு இடப்பாகத்திலிருக்கச்செய்து மங்களாம்பிகை யெனப் பெயரிட்டனர். இவர் தாம் ஆதிகும்பேசர். பிரம்மா, ஆதிகும்பேசருக்கு பத்துநாள் உத்ஸவம் நடத்திக் கடைசி நாள் இந்த மாஹாமகக் குளத்தில் தீர்த்தம் கொடுக்கச் செய்தார். இதுவே வருஷந்தோறும் மாசி மாதத்தில் உத்ஸவரூபமாக நடைபெறுகிறது.

பொற்றாமரையுடன், சாரங்கபாணி கோயில் தோற்றம் M. K. R.

நவநதிகளின் ஸாந்நித்தியம்.

இது தவிர கங்கை, யமுனை, ஸரஸ்வதி, நருமதை, கோதாவரி, மஹாநதி, பயோஷ்ணி (பாலாறு), காவிரி, ஸரயு, ஆகிய நவநதிகளும் தம் பிரவாகங்களில் ஸ்நானஞ் செய்யும் ஜனங்களின் பாபங்களைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதால், அவைகளைப் போக்குவதற்காக ஒன்பது கன்னிகைகளாக உருக்கொண்டு சிவபிரான் சொன்னபடி மகாமகக் குளத்தில் வந்து நீராடித் தங்களுடைய பாபங்களைப் போக்கிக்கொண்டு தங்களுடைய அம்சங்களில் சாதியோடு அக்குளத்தில் தங்கினார்கள். இந்தக் காரணம்பற்றி இக்குளத்திற்கு, "கன்னியா தீர்த்தம்" எனப் பெயருண்டாயிற்று. குளத்தைச் சுற்றிப் பதினாறு மண்டபங்கள் இருக்கின்றன. இவைகளைக் கோவிந்த தீக்ஷிதர் என்னும் பெரியவர் கட்டினார். இவர் பதினாறும் நூற்றாண்டில் தஞ்சாவூரில் ஆண்ட அச்சுதப்ப நாயக்கரின் முதல் மந்திரி. அரசர் தம் எடை பொன்னை நிறுத்துக் கொடுப்பதாகிய துலாபாரதானம் செய்தார். அப்படித் துலாபார தானம் செய்தகாட்சி குளத்தின் வடகரையில் மேற்கு மூலையிலுள்ள மண்டபத்தில் செதுக்கப்பட்டிருக்கிறது. இம்மண்டபத்திற்குத் துலாபார மண்டபமென்றே பெயர்.



சாரங்கபாணி கோவில்—இரண்டாவது கோபுரமும், மண்டபமும் M. K. R.

மஹாமக ஸ்நானஞ் செய்யும்விதம்.

ஸ்நானத்திற்குமுன் விசுவநாதர் ஸந்நிதியில் நவ கன்னியரையும் பூஜித்துப் பிரதக்ஷிணமாக அபிமுகேசுவரர், கௌதமேசுவரர், கும்பேசுவரர், ஆகிய மூன்று மூர்த்திகளையும் தரிசனம் பண்ணிக்கொண்டு குளத்தின் வடகரையிலிருக்கும் அச்வத்தமரத்தைச் சுற்றிவந்து நவகன்னியரையும் தியானஞ் செய்துகொண்டு ஸ்நானஞ் செய்யவேண்டும்.

கும்பேசுவரர் கோவில்—கோபுரம் M. K. R.

மகாமக ஸ்நானத்தால் மஹா பாதகங்களும் நீங்கும். புத்திர ஸந்தானம் முதலிய நன்மைகள் ஏற்பட்டதாகவும் புராணத்தில் பல கதைகள் இருக்கின்றன. பழைய நாட்களில் மஹாராஜாக்களும் இந்தப் புண்ணிய காலத்தில் ஸ்நானஞ்செய்யக் கும்பகோணத்திற்கு வருவது வழக்கமென்று தெரிகிறது. மிகவும் பிரஸித்திபெற்ற விஜயநகரத்தின் அரசரான கிருஷ்ணதேவராயர் கி. பி. 1517ம் வருஷம் மஹாமகத்திற்

கும்பேசுவரர் கோவில்—பொது தோற்றம் M. K. R.

குக் கும்பகோணத்திற்கு விஜயம்செய்து தானங்கள் செய்ததைப் பற்றிக் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

கும்பகோணமும், அதன் கோயில்களும்.

கும்பகோண க்ஷேத்திரம் தக்ஷிணகங்கையான காவிரியின் கரையிலிருக்கிறது. இத்தலத்தில் பிரம்ம, விஷ்ணு, ருத்திரராகிய மும்மூர்த்திகளும் ஸாந்நித்யம் செய்து ஸூர்யபகவானல் பூஜிக்கப்படுவதால் இதற்குப் பாஸ்கர க்ஷேத்திர மென்றும் பெயருண்டு. முன் காலத்தில் சோழ மன்னர்கள் சிலகாலம் இந்த ஊரைத் தலைநகராகக் கொண்டிருந்தன ரென்று தெரிகிறது. ஸமீபகாலத்திலும் இவ்வூருக்குச் சமீபத்திலுள்ள சோழன் மாளிகை என்னும் ஊரில் பழமையான கட்டிடம் இருந்தது. இவ்வூரில் ஒருபாகத்திற்கு நாணயக்காரன்பேட்டை யெனப் பழைய பெயர் வழங்கி வருகிறது. இது தவிர மாதலம் பேட்டை யென்பது ஒரு சோழராஜனின் சேனை தங்குமிடமாக ஏற்பட்டிருந்தது. இந்த ஸ்தலத்திற்கு, புராணங்களில் குடமூக்கு என்றும், குடந்தை யென்றும் பெயர்கள் வழங்கி வந்திருந்தன. இப்போதும், வைஷ்ணவர்கள் இந்த ஊரை திருக்குடந்தை யென்றே வழங்குகிறார்கள்.



சாரங்கபாணி ஸ்வாமி கோவில் முன் கோபுரம் M. K. R.

ஆராவமுதே அடியேனுடலம் நின்பாலன் பாயே
நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே !
சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர் திருக்குடந்தை
ஏரார்கோலம் திகழக் கிடந்தாய் கண்டேன் எம்மானே !

(திருவாய்மொழி)

பொற்றாமரை தீர்த்த கட்டம் M. K. R.

திருக்குடந்தை

நடந்த கால்கள் நொந்தவோ? நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ? விலங்குமால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசு வாழி கேசனே.
(திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தம்).

600 008.

நாகேஸ்வரஸ்வாமி முன் கோபுரம் M. K. R.

Q23:36 2193KU N37

ஸ்ரீ சாரங்கபாணி கோயில்

முன்னொரு காலத்தில் ப்ருகு மஹரிஷி ஹேமரிஷி யெனப் பெயர் பூண்டு பொற்றாமரைக் குளத்தின் கரையில் தவம் புரிந்து மஹாலக்ஷ்மியைப் புதல்வியாக அடைந்தார். மஹாவிஷ்ணுவும் வைகுண்டத்திலிருந்து சாரங்கபாணியாக ரதாரூடராய்ப் பிரஸன்னமாகி அந்தப் பெண்ணை மணம் புரிந்தார். பகவான் வைகுண்டத்திலிருந்து இறங்கினாரென்னும் வரலாற்றை ஒட்டிக் கர்ப்பக்ருஹமானது யானை குதிரைகளுடன் கூடிய ஓர் ரதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெருமாளைப் பூதத்தாழ்வரும், திருமழிசை ஆழ்வாரும், நம்மாழ்வாரும், பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், "அபர்யாப்தாமிர்தன்" என்றும் "ஆராவமுதன்" என்றும் அனுபவித்துப் பாடியுள்ளார். நாலாயிர திவ்யப் பிரபந்தம் இந்த ஸ்தலத்திலிருந்தே வெளிப்பட்டதாக சொல்லப் படுகிறது. ஆதலால் இந்தப் பெருமாளுக்குப் பிரபந்தம் வெளியிட்ட பெருமாளென்றும், ஆராவமுது ஆழ்வார் என்றும் திருநாமங்கள் வழங்குகின்றன.



நாகேசுவரஸ்வாமி கற்பகிருக விமானம் M. K. R.

துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்
பிறவி நீங்க பிதற்றுமின் பித்தராய்
மறவனைப் பார்த்தன் மேற்கணை தொட்டவெம்
குறவ னுருறை யுங்குட மூக்கிலே.

(திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்)
திருக்குடமூக்கு—திருக்குறுந்தொகை.



நகேசுவரஸ்வாமி கோயில் நடராஜ மண்டபம் M. K. R.

ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் கோயில்

ஸ்தலபுராணத்தில் சொல்லப்பட்ட கும்பத்தின் ஸம்பந்தமாக இங்கு ஸாந்நித்தியமான சிவபெருமானுக்கு ஆதி கும்பேசுவரரென்ற பெயர் வழங்கிவருகிறது. இந்தக் கோயில் புராதனமானது. புராணத்தில் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அம்மனுக்கு மங்களாம்பிகை யென்று பெயர்.

ஸ்ரீ நாகேசுவரர் கோயில்

மஹாமகக்குளத்தின் ஸமீபத்தில் இந்தக் கோயில் இருக்கிறது. இதுவும் மிகப் புராதனமானது. பிராகாரத்தில், ஸூரியபகவானுக்கு ஒரு ஸந்நிதி இருக்கிறது. முன்னொரு காலத்தில் ஸூரியனுக்கு ஒளிபோய்விட்டதாகவும், அவன் நாகேசுவரரைப் பூஜைசெய்து ஒளி யடைந்ததாகவும் ஒரு கதையுண்டு. இப்பொழுது, வருஷத்தில் மூன்று நாள் கர்ப்பக்கிருஹத்திலுள்ள லிங்கத்தின் மேல் சூரியகிரணம் விழுகிறது. இந்தக் கோயிலிலிருக்கும் நடராஜரின் மண்டபம் குதிரைகள் பூட்டின ரதரூபமாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

நாகேசுவரஸ்வாமி கோவில்—அம்மன் ஸன்னதியும் இரண்டாவது கோபுரமும் M. K. R.

ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
யிப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே,
கூவிஅம ருலகனைத்து முருவிப் போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார் போலுந்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்,
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத் தெங் கூத்தனாரே.

திருக்குடந்தைக் கீழ்க்கோடம்—
(திருத்தாண்டகம்).

ஸ்ரீ காசி விசுவநாதர் கோயில்

இது மஹாமகக்குளத்தின் வடகரையில் இருக்கிறது. இந்தக் கோயிலில் கங்கை, யமுனை முதலிய நவகன்னிகைகளுக்கும் தனியே ஓர் ஸந்நிதி இருக்கிறது. பெண் மக்களனைவரும் நவகன்னியரைப் பெரிய தெய்வமாகப் பாராட்டுகின்றனர். நெடு நாள் பருவமடையாத

அரசாங்க கல்லூரி M. K. R.

பெண்களும், குழந்தையில்லாத ஸ்திரீகளும் மஹாமக தீர்த்தத்தில் நீராடி நவகன்னியரைப் பூஜை செய்து மனோபீஷ்டத்தை அடைகிறார்கள்.

178409

ஸ்ரீ ராமஸ்வாமி கோயில்

இது தஞ்சாவூரில் ஆண்டு வந்த ரகுநாத நாயகரால் கட்டப்பட்டது. அந்த அரசர் குளம் வெட்டும்போது ஸ்ரீராமர் ஸீதை முதலிய விக்ரஹங்கள் அகப்பட்டதால் இந்தக் கோயில் கட்டுவதற்கு ஸந்தர்ப்பம் வாய்ந்தது. ஸாதாரணமாக ஸ்ரீராமர் ஸந்நிதிகளில் கோதண்டராமர் நின்ற திருக்கோலமாக இருப்பது வழக்கம். ஆனால், இவ்விடத்தில் பட்டாபிஷேகத்திருக்கோலம் கொண்டுள்ளார். முன் பிராகாரத்திலுள்ள நேர்த்தியான பதுமைகள் ராமாயண கதையை ஒட்டியிருக்கின்றன. திருப்பணி மிகவும் அழகாயிருக்கிறது.

ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி கோயில்

இது காவிரிக்கரைக்கருகில் கொஞ்சம் உயர்ந்த மேட்டின் மேல் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ மஹாவிஷ்ணு, தமது முக்கிய ஆயுதமான சுதர்சனமென்று பெயருள்ள சக்ரத்தில் ஆவிர்பவித்து ஸ்ரீ சக்ரபாணி



காவேரி—பழைய பாலம் M. K. R.

யாய் இவ்விடத்தில் தரிசனமளிக்கிருர். இந்தக்கோவிலில் சூரியன், அக்னி, பிரம்மா, இவர்களுக்கும் பூஜை யுண்டு.

சோழநாட்டுச் சிறப்பு

தமிழ் நாட்டில் சிறந்து விளங்கியவை சேர சோழ பாண்டிய ராஜ்யங்கள் மூன்றுமே. இவற்றில் சோழ நாட்டுக்கு புனல் நாடு என்று பெயர் வழங்கியது. ஔவையாரும், "சோழ வளநாடு சோறுடைத்து" என்று சோழநாட்டைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். இப்போதுள்ள தஞ்சாவூர் ஜில்லாவும், திருச்சிராப் பள்ளியில் பெரும்பாகமும் சோழ நாட்டில் அடங்கி இருந்தன. அசோக மன்னரின் கல் ஸ்தம்பத்தில் (கி. மு. 260) சோழ நாட்டின் சிறப்பைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச் சோழ மன்னர்களில் ராஜராஜ சோழன் என்பவன் இலங்கையும் ஜயித்தான் என்று தெரியவருகிறது. சோழ ராஜர்கள் பல அற்புதமான கோயில்களைக் கட்டினதல்லாமல் காவிரிக்கு அணைகட்டிப் பல வாய்க்கால்களையும் வெட்டினுர்கள்.



காவேரி—காந்தி-இர்வின் பாலம் (புதியது) M. K. R.

சிலப்பதிகாரம், மணிமேகலைமுதலிய நூல்களிலிருந்து காவிரிப்பூம் பட்டினம் ஓர் பெரிய துறைமுகமாக இருந்ததாகவும், பலமான கப்பல் வியாபாரம் நடந்ததாகவும், அந்நகரைக் கடல் கொண்டு விட்டதாகவும் தெரியவருகிறது. இப்போது, அங்கே கடலோரத்தில் காவிரிப்பட்டினம் என்னும் பெயருடன் ஒரு சிறிய ஊர் இருக்கிறது.

கீர்த்திவாய்ந்த சோழநாட்டு ஜனங்கள் பல வித்தைகளிலும் தேர்ச்சி அடைந்தவர்கள். தியாகப்பிரம்மம் பிறந்த இடம் இந்நாட்டிலுள்ள திருவையாறே. ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர் ஸ்வாமிகளுடைய மடம் ஆதிகாலம் தொட்டுக் காஞ்சியிலிருந்தது ; தஞ்சாவூர் அரசனான பிரதாப ஸிம்மனும் அவனுடைய மந்திரியான டபீர் பந்தும் வேண்டிக்கொண்டதன் காரணமாக 18-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தஞ்சாவூருக்குக் கொண்டுவரப்பட்டு பின்பு கும்பகோணத்துக்கு மாற்றப்பட்டது. கும்பகோண மடம் தற்காலத்தில் அத்வைத மதத்துக்கு முக்யமானது.

கும்பகோணத்திற்கு ஸமீபத்தில் விசிஷ்டாத்வைதத்துக்கு முக்யமான அகோபில மடம் இருக்கிறது. திருவாவடுதுறை, திருப்பனந்தாள், தருமபுரம் முதலிய சைவ ஆதீனங்களும் இருக்கின்றன.

திருவிடைமருதூர்—தேர் M. K. R.

காவிரிக்கரையிலுள்ள கும்பகோணம் காலேஜுக்கு தென்னிந்திய கேம்பிரிட்ஜ் (Cambridge of South India) என்ற உரிமை ஏற்பட்டிருக்கின்றது. இதில் படித்தவர்களில் பலர் பொது கல்வியிலும் சாஸ்திரங்களிலும் ராஜ தந்திரத்திலும் மிகவும் கீர்த்தி பெற்றவர்கள்.



நாகேசுவரர் கோவில்—சரித்திர விசேஷமுள்ள ஒரு சிலை M. K. R.

கும்பகோணத்தைச் சுற்றிஉள்ள ஸ்தலங்கள்

கும்பகோணத்தைச் சுற்றிச் சுமார் பத்து மைல் விஸ்தீரணத்தில் பதினெட்டு க்ஷேத்திரங்கள் அடங்கியுள்ளன. அவைகளில் முக்ய மானவை :—திருபுவனம், திருவிடைமருதூர், திருநாகேசுவரம், தாரா சுரம் (ராஜராஜபுரம்), சுவாமிமலை.

திருவிடைமருதூர்

பரமசிவன் விபண்டகர் என்னும் முனிவரது தவத்துக்கிரங்கித் தைபூசத்தன்று தரிசனமளித்ததாயும், மஹாவிஷ்ணு காஸ்யபரிஷிக்கு மருத மரத்தடியில் தரிசன மளித்ததாயும் ஓர் ஐதிகிய முண்டு. இப்படி ஹரியும் ஹரனும் மருதமரத்தடியிலிருப்பதால் திருவிடை மருதூர்



திருபுவனம்—முன் கோபுரம் M. K. R.

என்று பெயர் வழங்கலாயிற்று. இந்த ஸ்தலத்திற்கு "மத்தியார்ஜுனம்" என்பது வடமொழிப் பெயர். சோழமன்னர்களில் ஒருவன் தன்னைப்பிடித்திருந்த பிரம்மஹத்தியை இந்த மூர்த்தியின் தரிசனத்தால் நீக்கிக்கொண்டான்.

இங்கு தைப்பூச உத்ஸவமும், திருத்தேரின் மகிமையும் விசேஷம். இந்த ஸ்தலத்தில் பட்டினத்தார் சிலகாலம் வாசஞ்செய்தார். அவருடைய உருவச்சிலை இரண்டாம் பிராகாரத்தில் கீழ்கோபுரத்தில் செதுக்கப்பட்டிருக்கிறது.

திருநாகேசுவரம்

சம்பகாரண்யம் எனப் பெயர் வாய்ந்த இந்த க்ஷேத்திரம் கும்பகோணத்துக்குக் கிழக்கே மூன்று மைல் தூரத்தில் உள்ளது. இவ்விடத்தில் நாகராஜன் சிவனைத் தரிசித்ததாகச் சொல்லப்படுகிறது. பெரிய புராணம் எழுதின சேக்கிழார் நாயனார் இருந்த இடம் இதுவே. இவர் இரண்டாம் குலோத்துங்க சோழனுக்கு மந்திரியாக இருந்தார். இவருடைய உருவச்சிலையும் இக்கோயிலில் காணப்படுகிறது. இதற்கு ஸமீபத்தில் திருவிண்ணகர் (ஒப்பலி அப்பன்) கோவில் என்று பெயர்

திருபுவனம்—விமானம் M. K. R.

கொண்ட ஓர் விஷ்ணு கோவிலிருக்கிறது. இதனைச் சோழ நாட்டுக் குத் திருப்பதி என்றே சொல்லலாம்.

திருபுவனம்

தஞ்சாவூர் பிருஹதீசுவரஸ்வாமி கோயிலின் அமைப்பு மிகவும் விசேஷம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பிற்காலத்துச் சோழமன்னர்கள் இதைப்போலவே கங்கைகொண்ட சோழபுரத்திலும்



திருபுவனம்—சரித்திர விசேஷமுள்ள பிம்பங்கள் M. K. R.

தாராசுரத்திலும் திருபுவனத்திலும் கோயில்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்தக்கோவில் மூன்றாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இதில் ஓர் கல்வெட்டில் இந்த ஜயங்களையும் திருப்பணிகளையும் பற்றிக் குறிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்வாமிமலை

முருகன் மலைக்கடவுள், பழனியிலும், திருச்செந்தூரிலும், திருத்தணிகையிலும், திருவண்ணாமலையிலும் சுப்பிரமணிய ஸ்வாமிக்குக் கோவில்கள் உண்டு. ஆகையால், மலைகளில்லாத தஞ்சாவூர் ஸமவெளியிலும் முருகனுக்கு ஒரு கட்டுமலை இருக்கிறது.

தந்தையான சிவ பிரானுக்கு ஒரு காலத்திலுண்டான பாபத்தைப் போக்குவதற்குப் பிரணவத்தின் பொருளை உபதேசித்த ஸ்தலம் இதுவே.

நாதன்கோயில்

கும்பகோணத்திற்குத் தெற்கே நான்கு மைல் தூரத்தில் நாதன் கோயில் என்று ஒரு ஸ்தலமிருக்கிறது. இவ்விடத்தில் முன்னொருகாலத்தில் நந்திகேசுவரர் பெரிய தவம் செய்ததாகவும், அவருக்காக மகாவிஷ்ணு பிரஸன்னமானதாகவும் சொல்லப்படுகிறது. பல்லவ அரசர்கள் ஆண்டுவந்த காலத்தில் அவர்கள் ராஜ்யத்தின் தென்பாகத்திற்கு இதை தலைநகராய் வைத்துக்கொண்டிருந்தார்கள் அதற்கு அப்போது



மகாமகக் குளத்தில் சூரிய அஸ்தமன தோற்றம் M. K. R.

நந்திபுரமென பெயர் வழங்கியதாக தெரிகிறது. திருமங்கை ஆழ்வார் இதை நந்திரவிண்ணகரமென்று பாடியிருக்கிறார்.

The Copyright of the photographs used in this booklet is the property of Mr. M. K. Rangaswami Aiyangar and the photographs are not to be reproduced without his permission.

The Huxley Press, Madras.

178409
... 600 008.

MAHAMAGHAM

As Mahamagham is one of the grandest of all the Religious fairs in India, the greatest and the most sacred of all the Indian "Epics" is the

MAHABHARATHA

The gigantic task of rendering a lucid and accurate translation of the great Epic in Tamil has now been achieved. The work consists of several volumes (about 9000 pages) and took nearly 20 years to complete though several pandits co-operated with the author Mr. M. V. Ramanujacharya.

Have you a set of these with you?

If not, please order for them now.

List of Volumes

					Rs.	A.	P.
Adi Parva	...	...	...	...	5	8	0
Sabha Parva	...	...	...	...	2	4	0
Vana Parva, Vol. I	...	...	...	...	3	8	0
Virata Parva	...	...	...	...	2	4	0
Udyoga Parva	...	...	...	...	4	0	0
Bheeshma Parva	...	...	...	...	3	0	0
Drona Parva	...	...	...	...	5	0	0
Karna Parva	...	...	...	...	3	0	0
Salya, etc., Parvas	...	...	...	...	3	0	0
Santi Parva, Vol. I	...	...	...	...	3	8	0
Santi Parva, Vol. II	...	...	...	...	4	8	0
Anusasana Parva	...	...	...	...	6	0	0
Aswamedika, etc., Parvas		...	...	...	3	8	0

For copies of the above apply to:—

M. V. RAMANUJACHARYA

Editor, Tamil Mahabharata

Manalur, KUMBAKONAM